**தேசிய விஞ்ஞான மன்றம் - 2020**

---

**1.1 அபிப்பிராயம்**

தேசிய விஞ்ஞான மன்றத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

மன்றத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.
இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல்

வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மன்றத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மற்றும் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆராய்ச்சி செயற்திட்டம் தொடர்பான வழிகாட்டலின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் மானியமொன்றின் அரையாண்டு நிதி செயன்முன்னேற்றம் யூன் 15 ஆந் திகதி மற்றும் திசெம்பர் 15 ஆந் திகதி மன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கும் பூர்த்தி செய்த ஆராய்ச்சி செயற்திட்டங்களின் இறுதி நிதி அறிக்கையுடன் எஞ்சிய நிதியை செயற்திட்டம் முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் மன்றத்திற்கு தீர்வுசெய்ய வேண்டிய போதும் 13 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் தொடர்பாக | தீர்வு செய்வதற்கு எஞ்சியுள்ள பணத்தை தீர்வு செய்யுமாறு நலனாலிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. நினைவூட்டல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | வழிகாட்டலின் பிரகாரம் நிதி முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டு வெளித்தரப்பினரின் கையிலுள்ள அரசின் மானியங்களை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| ரூபா 8,282,,388 தொடர்பாக அவ்வாறு நடடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

### 1.5.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல வருடக் கணக்காக இருந்து வரும் ரூபா 2,375,175 இருந்த கணக்காய்வுக் கட்டணங்கள் மீதி தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கணக்காய்வு அவதானிப்பில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 2,375,175 ஆன கணக்காய்வு கட்டண கொடுப்பனவிற்காக இணக்கப்பாடு அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. வருடாந்த கொடுப்பனவு கிடைத்த பின்னர் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | செலுத்த வேண்டியவற்றை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) PED 2/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 8/97 | தேசிய விஞ்ஞான மன்றத்தினால் 2018 மே முதல் 2020 திசெம்பர் 31 வரையிலான 32 மாத காலப்பகுதியில், மேற்குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக தொலைபேசி படிகளுக்கு உரித்தான 45 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 6,456,170 ஆன தொகையொன்று தொடர்பாடல் பட்டியல் தொடர்பாக கவனம் செலுத்தாமல் அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த உயர் எல்லை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தேசிய விஞ்ஞான மன்றத்தினால் PED 2/2015 சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கு தொடர்பாடல் கொடுப்பனவு 2015/06/01 ஆந் திகதி முதல் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் பட்டியல் நிரப்புதலின் சிக்கலான தன்மை காரணமாக, 2018 மே மாதம் முதல் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் பேரில் அனைத்து தொடர்பாடல் பட்டியல்களுக்கும் சம்பந்தப்பட்ட மாதத்தில் ஏற்படும் செலவுகள் தொடர்புடைய உத்தியோகத்தர் / பெண் உத்தியோகத்தரின் எழுத்துமூலம் உறுதிப்படுத்தப்பட்டு கோரப்பட்ட தொகை | ஏற்பாடுகளின சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அடுத்த மாதம் செலுத்தப்படும். இந்த முறை சர்ச்சைக்குரியதாக இருப்பதால், இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவால் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது, அதன் தீர்மானத்தின் பேரில் 2018 மே முதல் திசெம்பர் 2020 வரை கொடுப்பனவுகள் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதேநேரம் 2021 பெப்ரவரி மாதம் முதல் மேற்படி கொடுப்பனவுகள் முற்றாக நிறுத்தப்பட்டு, சுற்றறிக்கைக்கு அமைவாக உத்தியோகத்தர்களிடம் பட்டியல்களைப் பெற்று அந்த பட்டியல்களை மீள அளிக்கும் முறை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல் கோவை | ஒப்பந்த பெறுமதியில் 5% கொடுப்பனவு அடிப்படையில் பெறுகை செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக மதியுரையாளர் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக மதியுரை நிறுவனமொன்றை தெரிவு செய்வதற்காக பெறுகை வழிகாட்டல் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | பதில் கிடைக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.3 ஆம் பந்தி மற்றும் 6.3.6 ஆம் பந்திகள் | கூறுவிலை திறக்கும் செயற்பாட்டின் போது கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதிகளின் முன்னால் திறக்க வேண்டிய போதிலும் கேள்வி திறத்தல் செயற்பாட்டிற்கு உத்தியோக பூர்வமாக வருகை தரும் அனைவரும் வருகை தொடர்பாக கையொப்பம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் கேள்விதாரரின் வருகையை உறுதிப்படுத்து வதற்காக கேள்வி திறத்தல் | பதில் கிடைக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்பான அறிக்கை பதிவு கோவையில் அவதானிக்கப்படவில்லை . | | |
| (ஈ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.1 ஆம் பந்தி | மொத்த கிரய மதிப்பீடு பெறுகை நிறுவனத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மதியுரை சேவை நிறுவனமொன்றுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் இணைப்பு 03 இல் விடயப் பரப்பின் 1 ஆம் பிரிவின் பிரகாரம் மொத்த கிரய மதிப்பீடு தயாரித்தல் மதியுரை குழுவினால் மேற் கொள்ளப்பட்டிருந்தது. மதியுரையாளர்களுக்கான கொடுப்பனவு ஒப்பந்த கிரயத்தை அடிப்படையாக கொண்டே செய்யப்படுவதால் அச்செயற்பாடு பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்படாமல் மதியுரையாளரால் நிறைவேற்றியமை கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாக இருந்தது. | பதில் கிடைக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (உ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.2 ஆம் பந்தி | மொத்த கிரய மதிப்பீடு நிறுவன தலைவரால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அது அங்கீகரிகப்பட்டிருக்கவில்லை. | பதில் கிடைக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

---------------------

### 2.1 நிதி பெறுபேறுகள்

------------------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 23,467,308 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 26,962,258 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 50,429,566 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஏனைய வருமானம் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ------------------------------- | ------------------------ | ------------ |
| நிறுவனத்தினால் நிலத்தை தயார்படுத்துவதற்காக தனியார் | பதில் கிடைக்கவில்லை. | குறைந்த செலவிலும் கூடுதலான |

| | | |
|---|---|---|
| நிறுவனமொன்றின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக 04 கூறுவிலைகள் மாத்திரம் கிடைத்திருந்ததுடன் 4 ஆவது குறைந்த விலை சமர்ப்பித்தவருக்கு ஒப்பந்தம் அளிப்புச் செய்யப்பட்டிருந்தது. முதலாவது மற்றும் இரண்டாவது விலைகளை சமர்ப்பித்துள்ள ஒப்பந்தக்காரர்கள் தகைமை பூர்த்தி செய்யாமை அடிப்படையில் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் மூன்றாவது குறைந்த விலை சமர்ப்பித்தவருக்கு ஒப்பந்தத்தை வழங்காமை காரணமாக ஒப்பந்த கிரயம் ரூபா 3,134,002 ஆலும் மதியுரைக் கட்டணம் ரூபா156,700 ஆலும் அதிகரித்து காணப்பட்டிருந்தது. | | செயற்திறனுடன் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஒக்டோபர் 04 ஆந் திகதி ஆளுகை குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நில தயாரிப்புத் திட்டம் 06 ஆண்டுகள் தாமதமாக ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின் போது இப்பணியின் மதிப்பீடு மற்றும் ஒப்பந்த பெறுமதி ரூபா 30,480,000 ஆக இருந்ததடன் 2018 ஆம் ஆண்டில் அப்பெறுமதியின் கீழ் செயற்பாட்டை நிறைவேற்ற ஆளுகை சபை அங்கீகரித்திருந்த போதும் செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. 2019 ஆம் ஆண்டில் ஆளுகை சபை அங்கீகரித்த பெறுமதி ரூபா 36,040,000 ஆக இருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் இச் செயற்பாடு நிறைவேற்றப் | கணக்காய்வு விசாரணைக்கு பதில் கிடைக்கவில்லை. | மேலதிக கிரயமொன்றை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

படாமை காரணமாக செலவிடுவதற்கு நேர்ந்ததால் மேலதிகமாக மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா 5,560,000 ஆகும்.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 144 ஆக இருந்ததுடன் வெற்றிடமாக காணப்படும் பதவிகளின் எண்ணிக்கை 27 ஆக இருந்தது, அவ்வெற்றிடங்களில் 16 பதவிகள் 07 ஆண்டுகள் 10 மாத காலவீச்சில் இருந்ததுடன் அவ்வெற்றிடங்களை நிரப்புவுதற்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு மன்றத்தினால் 2021 மார்ச் கணக்காய்வு திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 திசெம்பர் 31 இல் காணப்பட்ட வெற்றிடங்களில் ஒன்று 2021 இல் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதுடன், ஏனைய தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காமை, ஜனாதிபதித் தேர்தல் காரணமாக ஆட்சேர்ப்புகளை இரத்து செய்தல், ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் சேவைக்கு வருகை தராமை கோவிட் 19 தொற்றுநோய் நிலைமை போன்ற காரணங்களால் ஆட்சேர்ப்பு செய்ய முடியவில்லை. | தேவையான பதவிகளுக்கு விரைவில் ஆட்சேர்ப்பு செய்வதற்கும், அவ்வாறு செய்வதற்கு ஆட்சேர்ப்பு நடைமுறையில் ஏதேனும் சிரமங்கள் இருப்பின் திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆட்சேர்ப்பு நடைமுறைக்கேற்ப ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் பதவி 2020 சனவரி 01 இல் வெற்றிடமாக காணப்பட்டதுடன் அப்பதவிக்காக கணக்காய்வு திகதி வரையிலும் ஆட்சேர்ப்பு இடம் பெற்றிருக்கவில்லை. . | பணிப்பாளர் நாயகம் பதவிக்கு 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் இரண்டு முறை விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன், ஆனால் முதல் சந்தர்ப்பத்தில் பதவிக்காக தேவையான தகைமையுடைய ஒருவர் இல்லாமல் இருந்ததுடன் இரண்டாவது சந்தர்ப்பத்தில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி பதவி பொறுப்பேற்றலை நிராகரித்திருந்தார். மீண்டுமொருமுறை இப்பதவிக்கு ஆட்சேர்ப்பிற்காக 2021 ஆகஸ்ட் மாதம் விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் ஒரு அவ்விண்ணப்பதாரி | ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மாத்திரம் இதற்காக விண்ணப்பித்திருந்தார். நேர்முக பரீட்சை நடாத்தி ஆட்சேர்ப்பதற்காக முகாமைத்துவ சபையினதும் அமைச்சினதும் அங்கீகாரத்தின் பேரில் மேற்கொள்ளப்படும். | |
| (இ) | வெற்றிடங்கள் உருவாகிய திகதி குறிப்பிடாமல் இருந்ததுடன் வருடக் கணக்காக வெவற்றிடமாக காணப்படும் கணக்கு உத்தியோகத்தர் மற்றும் புத்தக கட்டுநர் ஆகிய பதவிகளுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு கணக்காய்வ திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 02 கணக்கு உத்தியோகத்தர் பதவிகளுக்கு தொழில் திணைக்களத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு தற்போது வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது. அந்த வழக்கின் தீர்ப்பின்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>02 புத்தக கட்டுநர்களுக்கான வெற்றிடங்கள் 2014 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து காணப்படுகின்றன. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல தடவைகள் விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும், நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையில் (NVQ 4 சான்றிதழ்) தகைமையை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்காததால் இந்த 02 பதவிகளை நிரப்ப முடியவில்லை. இந்த 02 வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆட்சேர்ப்பு நடைமுறையை மீளாய்வு செய்வதற்கான முன்மொழிவுகள் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக இதுவரை அங்கீகாரம் கிடைக்கப் பெறவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவுதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |